**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 09/2021**
**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | மாரியப்பன் (PW5) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(A1,A2 are present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது நகப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு அரசு மதுபான கடையில் வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்துக்களை நான் எங்கு, எப்போது யாரிடத்தில் செய்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

அ.சா.1 சண்முகத்தை தெரியாது. ஆஜரில் உள்ள எதிரிகள் பழனிசாமி, தாமோதரன் ஆகியோர்களை தெரியும். அவர்கள் நான் வேலை செய்த மதுபான கடையின் வாடிக்கையாளர்கள். நான் தற்சமயம் எந்த அரசு மதுபான கடையில் வேலை செய்கிறேன் என்றால் பாசூர் அரசு மதுபான கடையில் வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு வேலப்பம்பாளையம், அரசு மதுபான கடையில் வேலை செய்தேன். கடந்த 23.10.2020ம் தேதி மதியம் 14.00 மணிக்கு நான் வேலை செய்த வேலப்பம்பாளையம், அரசு மதுபான கடைக்கு வந்த மலையம்பாளையம் போலீசார் கடை அருகில் சண்முகம் என்பவருக்கும், தாமோதரன், பழனிசாமி ஆகியோர்களுக்கும் இடையே நடந்த அடிதடி தகராறு சம்பந்தமாக சம்பவம் நடந்த இடத்தை பிரபாகரன் மற்றும் எனது முன்னிலையில் பார்வையிட்டு, பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.19 11:46:59 +0530

செய்ததாகவும், பார்வை மகஜரில் பிரபாகரனும் நானும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், அதன் பின்னிட்டு 14.15 மணிக்கு பிராந்தி கடை அருகில் கிடந்த சுமார் 94 செ.மீ. நீளமுள்ள செம்மந்தடியை மலையம்பாளையம் போலீசார் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், அதில் நானும் பிரபாகரனம் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் தாமோதரன், பழனிசாமி ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றும் நோக்கில் அவர்களுக்கு ஆதரவாக தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.19 11:47:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.09/2021**
**Prosecution Witness:**

| | |
|---|---|
| Name : **சண்முகம்** (PW1) | Date:19.01.2026 |
| Father's Name: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(A1,A2 are present.)***

எம்.பி.எண். 01/2025 மனு தாக்கல் செய்யப்பட்டு, 31.07.2025ம் தேதி மனு அனுமதிக்கப்பட்டு மனுவின் பேரில் அ.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில்

**குறுக்கு விசாரணை:–**

ஆஜர் எதிரிகள் எவ்வளவு காலமாக எனக்கு பழக்கம் என்றால் அவர்கள் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள் எனக்கு அவர்களை தெரியும். எனக்கும் எதிரிகளுக்கும் பூமி பிரச்சனையோ அல்லது கொடுக்கல் வாங்கல் பிரச்சனையோ இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற நேரம் வெளிச்சமான நேரம் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் டாஸ்மாக் கடை அருகே எப்பொழுதும் கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் எவ்வளவு நேரம் நடைபெற்று இருக்கும் என்றால் சுமார் அரை மணி நேரம் நடைபெற்று இருக்கும். சம்பவம் நடைபெற்றதை சுமார் 50 பேர் பார்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல சுமார் நான்கு, ஐந்து பேர் பார்த்திருப்பார்கள்.

2. சம்பவம் அரசு மதுபான கடைக்கு எதிராக நடைபெற்றது என்றால் சரியல்ல சுமார் 20 முதல் 30 அடி தள்ளி நடைபெற்றது. எதிரிகள் இருவரும் செம்மங்குச்சி தடியால் என்னை மாறி மாறி அடித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி செம்மங்குச்சி தடி கணுக்கணுவாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி தடியால் என்னை அடித்ததால் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி காயத்தை மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். நான் சம்பவம் நடைபெற்ற பிறகு மலையம்பாளையம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டேன்.

3. காவல் நிலையத்திற்கு நான் புகார் கொடுக்கும் பொழுது உடன் யார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.19 11:47:16 +0530

இருந்தார்கள் என்றால் எனது மனைவியும், சக்திவேல் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர்கள் இருந்தார்கள். நான் கொடுத்த புகாரில் கார்த்திகேயனும் சக்திவேலும் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் செய்தார்கள். ஈரோடு அரசு மருத்துவமனைக்கு போலீசார் வந்து என்னை விசாரித்தார்களா என்றால் உதவி ஆய்வாளர் வரதராஜன் என்னை மறுநாள் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளபடி சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.19 11:47:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.